# இறந்தபின் எங்கள் நிலை

## வினா - விடை

கலாபூஷணம், சைவப்புலவர்
சு. செல்லத்துரை

இளவாலை
சிவகாமசுந்தரி செல்லத்துரை
நினைவு வெளியீடு
2016-07-30

100/=

# இறந்த பின் எங்கள் நிலை

## வினா – விடை


கலாபூஷணம், சைவப்புலவர்

சு.செல்லத்துரை



இளவாலை

சிவகாமசுந்தரி செல்லத்துரை

நினைவு வெளியீடு

2016.07.30

# இறந்த பின் எங்கள் நிலை

## முன்னுரை

நான் யார்? ஏன் இன்பமும் துன்பமும் கலந்த இந்த வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். இந்த வாழ்வு எனக்கு எப்படி வந்தது. நான் எப்படி இங்கு வந்தேன். இந்த வாழ்வு முடிந்து செத்தபின் என்ன நடக்கப் போகின்றது என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிந்தால் இந்த வாழ்வைப் பயனுடையதாக ஆக்கிக் கொள்ளலாம்.

நம்மைப் பற்றி நாம் அறிய வேண்டும் என்பதையே சோக்கிரட்டீஸ் எனும் கிரேக்க ஞானி "உன்னையே நீ அறிவாய்" எனச் சொன்னதை நாம் அறிவோம். அவர் சொல்வதற்கு முன்னமே எங்கள் தமிழ் ஞானி திருமூலர் சுவாமிகள்

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னை அர்ச்சிக்கத் தான் இருந்தானே

எனத் தமிழிற் சொல்லி வைத்திருப்பதை நம்மிற் பலர் அறிவதில்லை.

தன்னை அறிதல் பற்றி நம் சைவசித்தாந்த சாத்திரங்களும் திருமூலரை அடியொற்றி ஆழமாகவும் அகலமாகவும் சொல்கின்றன. நாம் இதனை ஓரளவாவது அறிந்து பயன்பெற வேண்டும். என்பதற்காக இலகுவாக அறிந்து கொள்வதற்கு வாய்ப்பாக இச்செய்தி வினா விடை வடிவில் சுருக்கமாகத் தரப்படுகிறது.

இறந்தபின் எங்கள் நிலை எனும் இதனைப் படித்துச் சிந்தித்து மேலும் ஆழமாக அறிந்து எல்லோரும் பயன்பெற வேண்டும் என்பதே எமது விருப்பம்.

1. **இறந்த பின்னும் உயிருக்கு வாழ்வுண்டா?**

உண்டு. உடல் வேறு உயிர் வேறு. இறப்பது உடல் தான். இதுவரை இந்த உடலுள் இருந்து உடலை இயக்கிக் கொண்டிருந்த உயிர், உடலை விட்டு வெளியேறுதலையே இறப்பு என்கின்றோம். உயிர் சாவதில்லை. ஆதலால் உயிருக்கு வாழ்வுண்டு.

2. **உடலை விட்டு உயிர் ஏன் வெளியேறுகிறது?**

இருந்து வாழ்வதற்குரிய தகுதியை உடல் இழந்து விட்டால், உடனே உயிர் வெளியேறுகிறது.

3. **உயிர் வெளியேறுவதை நாம் காண முடியுமா?**

உயிரையே நாம் கண்டதில்லை பின் அது வெளியேறுவதை எப்படிக் காணமுடியும். உயிர் தங்கியிருக்கும் இப் பருஉடம்பை விட, உயிருக்கு வேறான சூக்கும உடல் இருக்கிறது. அது நமது கண்ணுக்குத் தெரியக் கூடியதல்ல.

4. **உயிர் சாவதில்லையா?**

இல்லை. இறந்தவரைப் பரிசோதிப்பவர் உயிர் போய்விட்டது என்று சொல்வதைக் கேட்கிறோமல்லவா, உயிர் செத்துப் போச்சு என்பது உபசாரவழக்கு, உயிர் கடவுளைப் போல அநாதியான என்றுமுள்ள பொருள். அது சாவதும் இல்லை, அழிவதும் இல்லை.

சுவாசமும் நின்று இதயத் துடிப்பும் நின்று விட்டால், உயிர் உடலை விட்டுப் போய் விட்டதாக முடிவு செய்யலாம்.

5. **கடவுளுக்கும் உயிருக்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

இரண்டும், இரண்டு உள்பொருள்கள். கடவுள் எல்லாம் அறிபவர், அறிவே வடிவானவர், உயிர் அறிவித்தால் மட்டும் அறியும் பொருள்.

6. ஒருவர் சாகும்போது அதாவது அவர் உயிர் உடலை விட்டுப் பிரியப் போகிறது என்பதை அறியும் போது நாம் என்ன செய்ய வேண்டும்?

அவர் தீட்சை பெற்றவராயின் அவரது காதிலே, தீட்சை பெற்ற இன்னொருவர் மூலமந்திரத்தை ஓதவேண்டும். இல்லையேல் தேவாரம் முதலான திருமுறைகளை ஓதிக் கொண்டிருக்க வேண்டும். இது அவருடைய உயிர் கடவுளை நினைத்தபடி அமைதியாகப் பிரிவதற்கு உபகாரமாகும்.

7. உயிர் பிரியும் போது அழக்கூடாது என்கிறார்களே ஏன்?

முதற் குறிப்பிட்டது போல அந்த உயிர் பதற்றப்படாமல் அமைதி யடைய வேண்டும் என்பதற்காகவே.

8. உடலைவிட்டுப் பிரிந்த உயிர் எங்கு போகும்?

எங்குமே போகாது அங்குதான் நிற்கும். அது சூக்கும உடலில் நிற்பதால், எங்கள் கண்களுக்குத் தெரிவதில்லை. இவ்வளவு காலமும் உடலை ஆதாரமாகக் கொண்டு இருந்த உயிர், ஆதாரமின்றித் தவிக்கும் என்பதற்காகவே, சவம் இருக்கும் இடத்தின் மேல், புதிய வெள்ளைத் துணியால் வெள்ளை கட்டப்படுகிறது. வெள்ளையிற் தற்காலிகமாகத் தங்கி இருக்கும்.

9. அப்படியானால் அங்கு நடப்பவற்றையெல்லாம் அது அறியுமா?

ஆம். எல்லாவற்றையும் அறிந்து கொண்டு தான் இருக்கும்.

10. உயிர் ஒருகாலமும் சாகாது என்றால், அதன் முடிவு என்ன?

உயிர், தான்செய்த வினைப்பயன்களை அனுபவித்துத் தீரும் வரை, மாறிமாறிப் பிறந்திறந்து கொண்டிருக்கும். வினைப்பயன்

எல்லாம் அனுபவித்து முடிய, அது இறைவனடி சேரும். அதுவே மோட்சம் அல்லது முத்தி எனப்படும்.

11. **எல்லா உயிரும் முத்தி அடையுமா?**

அடையும். கால வேறுபாடு உண்டு. முன்னே சொன்னது போல அந்தந்த உயிர்கள் செய்த வினைப்பயனை அனுபவித்து முடிய முத்தியடையும்.

12. **செத்தவரை சிவகதி சேர்ந்தார் என்கிறார்களே அது பொய்யா?**

அது உபசார வழக்கு. அந்த உயிர் எப்பவோ ஒரு நாள் சிவகதி சேரும் என்பதை நினைவூட்டவே அப்படிச் சொல்லப்படுகிறது.

13. **உடலைப் பிரிந்த உயிர் எத்தனை நாட்களுக்கு அங்கு நிற்கும்?**

முப்பத்தொருநாள் வரை, அதாவது அந்தியேட்டிக் கருமம் முடியும் வரை அங்குதான் நிற்கும். அதன் பின்னர்அது போகவேண்டிய இடத்துக்குப் போகும்.

14. **உடலை எரித்து அல்லது அடக்கம் செய்துவிட்டபின் அது எப்படிச் செல்லும்?**

உடலுள் இருக்கும் போது, உடலுக்குள் கட்டுப்பட்டு இருந்த உயிர், உடலை விட்டு வெளியேறியதும், சுதந்திரமாகச் செல்லும் ஆற்றலைப் பெற்று விடும். நினைத்த மாத்திரத்தே சூக்கும உடலுடன் எவ்விடத்துக்கும் செல்லும்.

15. **அப்படியானால் 31வரை அங்கு நிற்பதேன்?**

இதுவரை பஞ்ச பூதங்களாலான உடலுள் இருந்த உயிர், உடலின் தொடர்பை முற்றாக நீக்குவதற்கு 31நாள் கால வரையறை தேவைப்படும். எதற்கும் ஒரு கால அளவு உண்டல்லவா.

16. எப்படி உடலுடன் இருந்த தொடர்பை நீக்கும்?

அதற்காகவே அபரக்கிரியைகள் நடக்கின்றன. செத்த உடலை எரித்துச் சாம்பலைக் கடலில் அல்லது நதியில் கரைத்தவுடன் ஒருபகுதி தொடர்பு அற்றுப்போகும். அந்தியேட்டிக் கிரியையில் புத்தலிக்கா என்னும் தருப்பையாலான உடல் செய்து அதனை எரித்துக் கடலில் கரைப்பதால் மீதி உடல் தொடர்பும் நீங்கும்.

17. அதற்குரிய அடையாளம் என்ன?

அந்தியேட்டிக் கிரியை செய்யும் மண்டபத்தின் வலது பக்கத் தென் கிழக்கு மூலையில் ஐந்துநிற மாவுகள் பரப்பி, தருப்பையால் ஆன உடலை வைத்து அபிசேகம், தீபாராதனை செய்து, மாவுகளைச் சேர்த்து அள்ளித் தருப்பையுடன் எரித்து சாம்பலை கடலில் விடுவர். பின் ஒரு கல்லை வைத்து பாடாணபூசை செய்வர். (பாடாணம் - கல்லு) கல் உயிரைக் குறிக்கும். ஐந்துநிற மாவுகளும் உடல் உருவாகக் காரணமான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களையும் குறிக்கும். ஆகவே இதன் மூலம் உயிருக்கும் பஞ்சபூத உடலுக்கும் இருந்த தொடர்பு முற்றாக நீக்கப் பட்டு உயிர் போகவேண்டிய இடத்துக்கு வழியனுப்பப்படும்.

18. சாதாரணமானவர்களால் இவையெல்லாம் செய்ய முடியுமா?

முடியாது. அதற்காகத்தானே செத்தவீட்டுக் கிரியை, அந்தியேட்டிக் கிரியை, வீட்டுக்கிருத்தியம் என்பவற்றைச் செய்யவெனப் புரோகிதர்கள் இருக்கிறார்களே அவர்கள் மூலம் செய்விக்கலாம்.

10. **இவ்வித புரோகிதர்கள் யாரும் இல்லாத நாடுகளில், அல்லது இடங்களில் வாழ்வோர் என்ன செய்வது?**

செத்தவீட்டுக் கருமங்களைப் பொறுத்தமட்டில், ஒரு மூத்தவரின் வழிகாட்டலுடன், அவரவர் செய்யக்கூடியதைச் செய்யலாம். தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளைப் படிக்கலாம். செத்தவரின் உடலைக் குளிப்பாட்டி, புதிய அல்லது அவருடைய நல்ல உடையை உடுத்தி, நெற்றியில் நீறணிந்து, மண்டபத்தில் ஒரு வாங்கில் தலை தெற்கே இருக்கக் கூடியதாக வைக்க வேண்டும். கொள்ளி வைப்பவரும் நீராடிப் புதிய வேட்டி சால்வை அணிந்து திருநீறு பூசியிருக்க வேண்டும். சவத்தைச் சுற்றி ஊதுபத்தி, கர்ப்பூரம் கொளுத்திக் கும்பிட்டு மாலை மரியாதை செய்ய வேண்டும்.

ஒரு புது மண்பானையில் நூல் சுற்றி, நீர் நிரப்பி மாவிலையும் தேங்காயும் வைத்து கொள்ளிக்குடம் வைக்க வேண்டும். ஒரு புதுச்சட்டியில் சந்தனக்கட்டையைத் தீ மூட்டி வைக்க வேண்டும். உரிமைக்காரப் பெண்கள் வாய்க்கரிசி போடுவார்கள். சுற்றி நின்று தீப்பந்தம் பிடிப்பார்கள். இறந்தவர் ஆணாக இருந்தால், இரு சுமங்கலிப் பெண்கள் மனைவியின் தாலியைக் கழற்றிக் கணவரின் மார்பின் மேல் வைப்பர். இறந்தவர் பெண்ணானால், சுமங்கலிப் பெண்கள் நிறைநாழி, வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், பூ என்பவற்றை இறந்த பெண்ணின் கையில் வைத்து எடுத்துப் பூசை அறையில் வைப்பர். பிரேத ஊர்வலத்தில் பிரேதத்தின் கால் பக்கம் முன்னாகச் செல்ல வேண்டும். உறவினர்கள் முன்னே செல்லக் கொள்ளி வைப்பவர் பக்கத்தில் செல்வார். ஒருவர் நெல்லுப் பொரி தூவிச் செல்வார்.

20. பிரேத தகனம் செய்யும் இடத்தில் என்ன செய்ய வேண்டும்?

தகனம் செய்வதற்குரிய இடத்தை மூன்று தரம் இடப்பக்கமாகச் சுற்றி வந்து, விறகின் மேல் பிரேதத்தை வைத்து, ஆண்கள் வாய்க்கரிசி போடுவார்கள். கொள்ளி வைப்பவர் இடப்பக்கமாக மூன்று முறை சுற்றி வந்து, குடத்தை உடைத்துக் கொள்ளியை வைத்துவிட்டு, வீழ்ந்து வணங்கி விட்டுச் செல்வார். தீ மூட்டிவிட்டு மற்றவர்களும் செல்வார்கள்.

21. கொள்ளி வைப்பதற்கு உரியவர் யார்?

செத்தவர் தந்தையாக இருந்தால் மூத்த மகனும், தாயாக இருந்தால் இளைய மகனும் வைக்கலாம். ஆண்பிள்ளைகள் இல்லாவிட்டால் பெண் பிள்ளைகள் வைக்கலாம். பிள்ளைகள் யாரும் இல்லாவிட்டால் கணவனுக்கு மனைவியும், மனைவிக்குக் கணவனும் வைக்கலாம். கணவனோ மனைவியோ இல்லை யென்றால் செத்தவரின் துடக்குரித்துள்ள ஒருவர் வைக்கலாம். அப்படியும் ஒருவரும் இல்லையென்றால் நண்பர் வைக்கலாம். இறந்தது திருமணம் ஆகாத பிள்ளைகளாய் இருந்தால் தந்தை அல்லது தாய் வைக்கலாம்.

கொள்ளி வைப்பவர் தொடர்ந்து அந்தியேட்டிவரை அங்கு நிற்க முடியாதவராய் இருந்தால் அவருடன் சேர்ந்து இன்னொரு பொருத்தமானவர் கொள்ளிக் கருமத்தில் பங்கு பற்றலாம். அவர் போக இவரே மீதிக் கருமங்களைச் செய்யலாம்.

22. கொள்ளி வைப்பவரின் கடமை என்ன?

சவத்துடன் கொள்ளிக் குடத்தைக் கொண்டுபோய் எரிக்கும் இடத்தில் குடத்தை உடைத்துக் கொள்ளி வைத்துச் சவத்தை எரிக்க வேண்டும்.

23. அவ்வளவு தானா?

தொடர்ந்து நடைபெற வேண்டிய கருமங்கள் அனைத்தையும் அவரே செய்ய வேண்டும். கொள்ளி வைத்தவர் விரதமிருந்து செத்தவர் வீட்டில் 31 நாளும், இரவில் விளக்கும் நீரும் வைத்து உணவு படைத்துக் கும்பிட்டு அங்கேயே படுக்க வேண்டும். மேற் கொண்டு செய்ய வேண்டிய காடாற்றுதல், எட்டுச்செலவு, அந்தி யேட்டி, ஆட்டைத்திவசம் முதலான எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.

24. இக்கருமங்களைச் சிரார்த்தம் என்று சொல்வதேன்?

சிரத்தையோடு செய்யப்பட வேண்டியவை ஆதலால் சிரார்த்தம் எனப்படுகிறது. தவறாமல் செய்ய வேண்டும்.

25. செய்யாவிட்டால் என்ன?

இறந்தவரின் உயிர் அமைதியின்றிப் பேய் பிசாசாக அலையும்.

26. காடாற்றுதல் என்றால் என்ன?

சுடுகாட்டில் சவத்தை எரித்த இடத்திற்கு நீர் ஊற்றி, வெப்பத்தைத் தணித்து, அங்குள்ள எலும்புகள், சாம்பல் என்பவற்றுக்கு பால், தயிர், இளநீர், தேன், பழவகைகளால் அபிசேகம் செய்து, அவற்றை ஒரு புது முட்டியில் எடுத்துக் கொண்டுபோய் கடலில் அல்லது ஆற்றில் போடவேண்டும். இது மூன்றாம் நாள் செய்யப்பட வேண்டியது.

27. சவத்தை 'காஸ்'(Gas) அல்லது மின்சாரத்தில் எரிப்பதானால்?

எரித்தபின் அவர்கள் தரும் சாம்பரை ஒரு புனிதமான இடத்தில் வைத்து, அபிசேகம் செய்து, முன் சொன்னது போல நீர் நிலையில் போடவேண்டும்.

28. காடாற்றியபின் எட்டுச்செலவு என்றீர்களே அது என்ன?

இறந்த ஏழாம் நாள் செய்யப்படுவது எட்டுச்செலவு. ஒரு கதிரையில் இறந்தவர் இருப்பதாகப் பாவனை பண்ணி அதில் அவர் அணிந்த ஆடை அணிகளை வைத்து, அவர் விரும்பியுண்ட உணவு வகைகளைப் படைத்து (மது, மாமிசம் 31 வரை பாவிப்பதில்லை) கும்பிட்டு, அதில் ஒரு பகுதியை ஊர்ப்புறத்தே உள்ள ஒரு ஒதுக்கிடத்தில் கொண்டுபோய் வைத்து, பலியாக ஒரு நீற்றுப்பூசணிக்காய் வெட்டிவைக்க வேண்டும். இக் கருமத்தை மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் இரவில் செய்ய வேண்டும்.

29. அந்தியேட்டி என்பது?

அந்திய இட்டி எனப்படும் இறுதிக்கருமம். அதாவது உடலுக்கும் உயிருக்கும் இருந்த தொடர்பை முற்றாக நீக்கும் கருமம். அதற்கென உள்ள புரோகிதர் மூலம் செய்விக்கலாம். 31ஆம் நாள் செய்யப்பட வேண்டும்.

புரோகிதர் இல்லாத நாடு அல்லது ஊர்களில், ஒரு கோவிலில் அல்லது மடத்தில், செத்தவர் பெயரால் ஏழை எளியவர்களுக்குத் தானதர்மம் செய்தல் வேண்டும். ஏழைகளுக்கு உணவு கொடுத்தல் மிக நல்லது. பசுவுக்கு புல் கொடுத்தலும் புண்ணியமாகும்.

30. வீட்டுக்கிருத்தியம் அல்லது சபிண்டீகரணம் என்பது?

அந்தியேட்டி முடிந்தபின் அன்றோ மறுநாளோ வீட்டில் செய்ய வேண்டிய கருமங்களிவை. இறந்தவரின் உயிரை, அவரின் முன்னோர்களின் உயிர்களோடு சேர்த்தல் என்பது இதன் பொருள். இதுவும் புரோகிதர் மூலம் செய்யப்படவேண்டியது.

பிதிர்தேவர்களை மந்திரபூர்வமாக அழைத்து அவர்கள் மூலம் தானதர்மங்களை இறந்தவரின் உயிரிடம் சேர்ப்பிப்பது ஆகும். புரோகிதர் இல்லா இடத்தில் தானதர்மங்களைச் செய்யலாம்.

31. பிதிர்தேவர் எனப்படுபவர் யார்?

படைப்புக் காலத்தில் இறைவனால் படைக்கப்பட்ட ஒரு தேவசாதியினர். அவர்கள் கண்ணுக்குத் தெரியப்பட மாட்டார்கள்.

32. பிதிர்தேவரிடம் கொடுக்கப்படும் தானதர்மம் இறந்தவரின் உயிரிடம் சேர்ப்பிக்கப்படும் என்பதை எப்படி நம்புவது?

இது கண்ணுக்குத் தெரியாத கருமம். உதாரணமாக அமெரிக்காவில் இருக்கும் ஒருவர் இங்குள்ள ஒருவர் பெயருக்கு அங்குள்ள 'வெஸ்றேண் யூனியனில்' கொடுக்கும் அமெரிக்க டொலர் பணம் இங்குள்ளவருக்கு இந்நாட்டு ரூபாவாகக் கொடுக்கப்படுவது போன்றதுதான் இதுவும் எனலாம்.

33. அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியத்தின் பின்னும் ஏதாவது செய்ய வேண்டுமா?

ஆண்டுதோறும் வரும் அவர் செத்த திதியிலும், ஆடிஅமாவாசை, சித்திரைப்பூரணை, மகாளயபட்சகாலம் என்பவற்றில் அவர் பெயரால் வழிபாடு தானதர்மம் செய்ய வேண்டும்.

34. திதி என்றால் என்ன?

அவர் இறந்த நாள். ஆங்கிலத்தில் திகதி என்பது போல, தமிழில் குறித்த மாதத்தில் பூரணையின் முன்னோ பின்னோ எத்தனையாம் நாளில் இறந்தாரோ, அந்த நாள் தான் திதி எனப்படும்.

35. திவசம் திதி பிள்ளைகள் எல்லோரும் செய்ய வேண்டுமா?

கொள்ளி வைத்தவர் இருக்குமிடத்தில் எல்லோரும் சேர்ந்து செய்ய வேண்டும். எல்லோரும் ஒன்று சேர முடியாத இடத்தில் அவரவர் இருக்கும் இடத்தில் தான தர்ம வழிபாடுகளைச் செய்யலாம். புரோகிதரை அழைத்து திவசம் செய்வது ஒரு இடத்தில் தான் செய்யலாம்.

36. செத்தவர் பெயரில் எவ்வளவு காலத்துக்கு அக்கருமங்களைச் செய்ய வேண்டும்?

எவ்வளவு காலத்துக்கும் செய்யலாம். அது இறந்தவர்மீது இருப்பவர்களுக்கு இருக்கும் அக்கறையைப் பொறுத்தது.

37. அப்படியானால் அந்த உயிர் வேறு பிறப்பு எடுத்த பின்னும் செய்வது பொருந்துமா?

பொருந்தும். உயிர் ஒன்றேதான். அது எடுக்கும் பிறப்புகள் (உடல்) தான் வேறுபடும். ஆதலால் அந்த உயிருக்கெனச் செய்யப்படும் புண்ணியங்கள் அது எங்கிருந்தாலும் போய்ச்சேரும். இது அவருக்கு மட்டுமன்றிச் செய்பவருக்கும் புண்ணியச்செயலாய் அமையும். அவருடைய ஆசி இவருக்குக் கிடைத்துக்கொண்டே இருக்கும். நாம் நம் முன்னோர்க்குச் செய்தால்தான் நம் பிள்ளைகள் நமக்குச் செய்வர்.

38. இதற்கு ஏதாவது சான்று உண்டா?

உண்டு. திருமணநிகழ்வில் பெண்ணைத் தாரதத்தம் பண்ணி மணமகன் கையில் ஒப்படைக்கும் போது பிதிர் ஆசிர்வாதம் என்றொரு கருமம் நடக்கும். ஒரு தட்டத்தில் அரிசி காய்கறி முதலானவற்றைத் தானமாக வைத்து, பிதிரர்களை அழைத்து, உங்கள் குலத்தில் வந்த இவர்களுக்கு மணம் முடித்துக்

கொடுக்கிறோம். நீங்கள் ஆசிர்வதிக்க வேண்டுகிறோம் எனக் குருக்கள் மந்திரத்தில் சொல்ல, நாந்தி சிரார்த்தம் என்னும் அந்தத்தானம் குருக்களிடம் கொடுக்கப்படும். இதுவே சாட்சியல்லவா.

**39. இப்படித் தானதர்மம் செய்யப்பட்டவருக்கும் செய்யப்படாமல் விடப்பட்டவருக்கும் இடையில் என்ன வித்தியாசத்தைக் காணலாம்?**

செய்யப்பட்டால் எப்பிறப்பில் இருந்தாலும் தன் பொருட்டுச் செய்யப்படும் புண்ணியப் பேற்றால் மனநிறைவுடன் வாழ்வார். மற்றவர் எதிலும் திருப்தி காணாமல் அங்கலாய்த்துத் திரிவார். இப்படிப்பட்டவர்களை நம் கண் முன்னால் காணலாம். நம்மிலும் காணலாம்.

**40. ஒருவர் இறந்தால் துடக்கு என்கிறார்களே? துடக்கு என்றால் என்ன? அது எத்தனை நாட்களுக்கு இருக்கும்?**

துடக்கு எனப்படுவது இறந்தவருக்கும் இருப்பவருக்கும் இடையிலான தொடர்பு பற்றி எழும் மன நெகிழ்வு. அது அசுசியானது. மன அமைதியைக் குலைத்துக் கவலையைக் கொடுப்பது. கண்ணால் காண முடியாதது, எனினும் உணர்வுபூர்வமாக அறியத்தக்கது. 31 நாட்களுக்கு அதாவது 30 இரவுகள் கழியும் வரை துடக்கு இருக்கும்.

**41. அந்தியேட்டி முடிந்தபின்தான் உயிர் போகவேண்டிய இடத்துக்குப் போகும் என்றீர்களே, அது போகவேண்டிய இடம் எது?**

மூன்று இடங்கள் உள. ஒன்று சுவர்க்கலோகம், மற்றது நரகலோகம் அடுத்து பூலோகம்.

**42. உயிரின் உடல்தான் எரித்துச் சாம்பலாக்கிப் புண்ணிய தீர்த்தத்தில் கரைத்தாகி விட்டதே. உடல் இல்லாமல் அது எப்படி இந்த உலகங்களுக்கு செல்லும்?**

எரிக்கப்பட்ட உடல் பூத சரீரம் என்று சொல்லப்படும். பரு உடல் – இது நிலம் நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களால் ஆக்கப்பட்டது. பஞ்சபூதங்களும் ஒன்று பிறிதொன்றாகப் பரிணமித்து உருவானது பரு உடல். இது பூத சரீரம் என்றும், புருதனா சரீரம் என்றும் தூல சரீரம் என்றும் சொல்லப்படும். எங்கள் உடல் தான் அது. தூல சரீரம் பூலோக வாழ்வுக்கு மட்டும் உரியது. ஏனைய உலகங்களுக்குப் போகும்போது அதற்கு இயல்பாகவே உள்ளதாகிய சூக்கும சரீரத்துடன் தான் செல்லும்.

**43. சூக்கும சரீரம் என்றால் என்ன?**

சூக்கும சரீரம் என்பது இயல்பாகவே இறைவனால் உயிருக்குக் கொடுக்கப்பட்ட நுண்ணுடல். அது எங்கள் புலன்களாகிய அறிகருவிகளுக்குப் புலப்படாத நுண்ணுடல் ஆகும். உயிர் எந்த உலகத்துக்குப் போனாலும் தூல சரீரத்தில்தான் செல்லும் இறைவன் ஆணைப்படி அது எங்கெங்கு செல்ல வேண்டுமோ அங்கெல்லாம் விரைந்து செல்ல வல்லது. பல தூல சரீரங்கள் தோன்ற இதுவே காரணமாயிருக்கும். இது புரியட்டரூபம் என்றும் சொல்லப்படும்.

தன் மாத்திரைகள் எனப்படும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், என்னும் ஐந்து புலன்களும், மனம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களாகிய மூன்றும் சேர்ந்து எட்டினாலும் ஆக்கப்பட்டதால் புரிஅட்டரூபம் எனப்படும். இதனையே ஔவையார் விநாயகர் அகவலில் புரியட்ட காயம் புலப்பட எனக்குத் தெரியெட்டு நிலையும் தரிசனப் படுத்தி என்கின்றார்.

44. உடல் இறந்தால் உயிர் சுவர்க்கம், நரகம், பூவுலகம் ஆகிய மூன்று உலகங்களில் ஒன்றுக்குச் செல்லும் என்றீர்கள். அதெப்படி?

உயிர் பூலோகத்தில் பூத உடலைப் பிரிந்ததும் அதுசெய்த வினைப்பயனுக்கு ஏற்ப அதனை அனுபவிப்பதற்காக பொருத்த மான உலகிற்கு சூக்கும சரீரத்தில் இறைவனால் அனுப்பப்படும் அது செய்த வினைகளில் கூடிய அளவு நல்வினைகள் அனுபவித்தற்குரியதாகப் புண்ணியமாகி விளைவடைந்து இருந் தால் இன்பத்தை அனுபவிப்பதற்காக சுவர்க்க லோகத்துக்கு அனுப்பப்படும். அங்கு இன்பத்தை அனுபவிக்கும்.

45. சுவர்க்க லோகத்தில் எந்த உடலுடன் இருந்து அனுபவிக்கும். ?

சுவர்க்கத்தில் சூக்கும உடலுடன் செல்லும் உயிருக்கும் சுவர்க்க இன்பத்தை அனுபவித்தற்குரியதான **பூதாசார சரீரம்** கொடுக்கப்படும். பூதாசாரம் என்றால் பஞ்சபூதங்களின் சாரமாகிய தன்மாத்திரைகளால் ஆக்கப்பட்டது என்பது பொருள்.

46. சுவர்க்க லோகத்தில் இன்பத்தை அனுபவித்த உயிர் பின் எங்கு செல்லும்?

தீவினைகள் விளைவடைந்திருந்தால் பாவத்தின் பலனாகிய துன்பத்தை வேதனையை அனுபவித்தற்கு நரகலோகத்திற்கு அனுப்பப்படும். அங்கு யாதனா சரீரம் எனப்படும். உடலில் இருந்து வேதனைப்படும். (யாதனா என்றால் வேதனை என்பது பொருள்)

47. நரகத்தையும் அனுபவித்தபின் எங்கு செல்லும்?

விளைவடையாமல் இருக்கின்ற வினைகளை அனுபவிப்பதற் காகத் திரும்பவும் பூலோகத்திற்கு அனுப்பப்படும். மீண்டும் பூமியில் பிறந்து வினைகளைச் செய்தும் அனுபவித்தும் உழலும்.

மிகக் கொடிய பாவங்கள் செய்திருந்தால் அவை விளைவு அடையும் வரை கல்லாகக் கிடக்கும்.

48. இது இப்படித்தான் என்பதற்குச் சான்றுகள் ஏதும் உண்டோ?

ஆம். மெய்கண்ட சாத்திரம் எனப்படும் சித்தாந்த சாத்திரங்களில் உண்டு. குறிப்பாகச் சிவஞான சித்தியார் எனும் நூலில் 126 ஆவது பாடல் இந்த உண்மையைத் தெரிவிக்கிறது. இதோ பாடல்.

"பூதனா சரீரம் போனால் புரியட்ட ரூபம்தானே
யாதனா சரீரமாகி இன்பதுன்பங்கள் எல்லாம்
நாதனார் ஆணை உய்க்க நரகொடு சுவர்க்கம் துய்த்து
தீதிலா அணுவாய் யோனி சேர்ந்திடும் சீவன் எல்லாம்"

49. உயிர் சுவர்க்கம் நரகம் பூலோகம் ஆகிய உலகங்களுக்குச் செல்வதற்கு ஏதாவது ஒழுங்கு உண்டோ.ஒவ்வொரு உலகத்திலும் எவ்வளவு காலத்திற்கு தங்கும் என்ற கால அளவு உண்டா?

உயிர் தான் செய்த நல்வினை தீவினைகளின் தன்மைக்கு ஏற்ப இவை எல்லாம் இறைவனாலேதான் தீர்மானிக்கப்படும். நம்முடைய சிற்றறிவுக்கு இவை எல்லாம் எட்டாது. இதற்குச் சான்று சித்தியார் 137 ஆவது பாடல்.

உடல்விடா யோனி பற்றி
உதிப்பினும் உதிக்கும், ஒன்றில்
படர்வுறாது உறும்பாவத்தால்
பாடாணம் போல் கிடந்து
கடன்அதாம் காலம் சென்றால்
கடுநரகு அதனில் வீழ்ந்து அங்கு
இடர் உறும் உருவர் சன்மத்து
அளவினில் எடுக்கும் அன்றே.

உயிர் செய்த அந்தந்த வினைகளது வன்மை, மென்மைகளுக்கு ஏற்பச் சொர்க்கத்தையோ, நரகத்தையோ அல்லது பூலோகத்தையோ அடைந்து அனுபவிக்கும்.

50. பூலோகத்தில் உயிர் எப்படி பிறக்கும்?

உயிர்கள் செய்த நல்வினை, தீவினைகளில் எஞ்சியுள்ள வற்றை அனுபவித்தற்குரியதான பொருத்தமான முன்னறிலும் உயர்ந்த அல்லது தாழ்ந்த பிறவி கிடைக்கும்.

51. மனிதப் பிறப்புக் கிடைக்கும்போது உயிர் எப்படித் தாயின் கருவுக்கு வருகிறது?

ஆகாயத்தில் சூக்கும உடலில் இருந்த உயிர், உணவு முதலியவற்றுடன் ஆணின் உடலில் புகுந்து ஆணும் பெண்ணும் கூடிப் புணரும்போது ஆணின் சுக்கிலத்துடன் இருந்த உயிர் அணு, பெண்ணின் கருப்பையில் சுரக்கும் சுரோணிதம் எனும் முட்டையுடன் சேர்ந்து கருவாகும். அது கருவாகும் அக்கணத்திலேயே உயிர் பூமியில் வாழ வேண்டிய வாழ்வையும், காலத்தையும் அது பக்குவமடையும் காலத்தையும் இறைவன் அமைத்து விடுவான்.

இதற்குச் சான்று - திருமூலர் திருமந்திரம் 453 ஆம் பாடல்.

**இன்புறு காலத்து இருவர் முன்பு ஊறிய**
**துன்புறு பாசத்துயர்மனை, வானுளன்**
**பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்**
**அன்புறு காலத்து அமைத்து ஒழித்தானே.**

52. பிறப்பென்றால் அதில் சம்பந்தப்பட்டவை எவை?

தனு, கரணம், புவனம், போகங்கள் என்பன.

தனு என்றால் உயிர் இருந்து வாழும் உடம்பு.

கரணம் என்றால் உடம்பால் அறியக்கூடிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் புலன்களும் உட்கருவிகளாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பனவும் ஆகும்.

புவனம் என்றால் அது பிறந்து வாழ்வதற்குரிய நாடு, ஊர், குடும்பம் முதலியவை.

போகமென்றால் வாழும் உடம்பால் அனுபவிக்கக்கூடிய இன்ப துன்ப நுகர்ச்சிகள்.

53. உடம்பாகிய பிறவியை எடுத்தால் பின்னும் வினைகளைச் செய்யுமா?

ஆம். வினைகளை அனுபவிப்பதும் செய்வதும் சங்கிலித் தொடர் போல் நடந்து கொண்டே இருக்கும்.

54. அப்படியானால் மீண்டும் இறப்பதும் பிறப்பதுமாகத்தான் இருக்குமா?

ஆமாம். அதுதான் அப்பர் பெருமான் 'பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே' எனச் சொல்லிவிட்டாரே.

55. பிறப்பினால் இறப்பும், இறப்பினால் பிறப்பும் வருமென்றால் இதற்கு முடிவுதான் என்ன?

அப்பர் சுவாமிகள்,

'பூக்கைக் கொண்டு அரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டு அரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக்கே இரைதேடி அலமந்து
காக்கைக்கே இரையாகிக் கழிவரே'.

என்று சொல்லியிருக்கிறாரே. ஆகவே கையிலே பூவை கொண்டு போய் இறைவன் திருவடிகளில் வைத்து வணங்க வேண்டும். நாக்கினால் அவன் நாமம் சொல்லிப் பாடவேண்டும். அதுவும் இன்னதைத்தா என்று கேட்காமல், 'வேண்டும் பரிசு ஒன்று உண்டெனில் அதுவும் உன்றன் விருப்பன்றே' எனப்பற்றற்ற முறையில் வழிபட வேண்டும். இதனை நமது ஆகமங்கள் நிஷ்காமிய வழிபாடு எனச் சொல்லியுள்ளன. (நிஷ்காமியம் என்றால் பற்றற்ற செயல்)

56. **தீவினை நல்வினை இரண்டும் பிறவிக்குக் காரணம் என்றீர்களே, அப்போ எந்த வினையைச் செய்வது?**

தீவினை இரும்பு விலங்கு, நல்வினை பொன் விலங்கு, இரண்டும் விலங்குதான். ஆதலால் இரண்டு நினைவும் இன்றிப் பற்றற்று வணங்க வேண்டும்.

57. **அப்படி எந்தப் பற்றும் இல்லாமல் வாழ முடியுமா?**

முடியும். இதனைத்தான் வள்ளுவன்,

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்றுவிடற்கு'.

என்று கூறியுள்ளார். இறைவனிடம் மட்டுமே பற்றினை வைத்துக் கொண்டால் மற்றப்பற்றுகள் எம்மைவிட்டு விலகிவிடும். பற்றில்லையெனில் பிறப்பும் இல்லையாகிவிடும்.

58. இதற்கு உதாரணம்?

நமது சிவனடியார் வாழ்வு, சேக்கிழார் சுவாமிகள் சிவனடி யார்களைப் பற்றிச் சொல்லும் போது,

'கேடும்ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'.

என்றார். இவர்கள் போல பற்றின்றி வாழ வேண்டும்.

59. எங்கிருந்து வந்தோம் எங்கே போகப் போகிறோம் என்பதை அறிந்தோம். முந்திய பிறப்பிலிருந்து இப்பிறப்பிற்கு வந்தோம். இனி மறு பிறவிக்குப் போகப் போகிறோம். உண்மையில் நாம் எங்கு போக வேண்டும்?

இறைவன் திருவடிகளுக்குப் போகவேண்டும். அதற்குரிய முயற்சிகளைச் செய்ய வேண்டும். அதற்காகத்தான் நாயன் மார்களை உதாரணமாகச் சொல்லப்பட்டது. வாழ்வு யாத்திரை போன்றது. யாத்திரையில் அங்கங்கு தங்கி நின்று இறுதியில் குறிப்பிட்ட கோயிலை அடைதல் போலப் பல பிறவிகளிலும் பிறந்திறந்து இறுதியில் இறைவன் திருவடிகளை அடைதல் வேண்டும். இந்த வாழ்வு ஆன்ம யாத்திரையாகும் என்பதை உணர்வோம்.

60. நாம் செய்யும் வினைகள் தான் பிறப்புக்குக் காரணம் என்ப தறிந்தோம். இவை எப்படிப் பயன்தரும்.

செய்யப்படும் நல்வினை தீவினைகள் முறையே புண்ணிய பாவங்களாகப் பக்குவப்பட்டு முறையே இன்ப துன்பங்களாக

அனுபவத்துக்கு வரும் செய்யப்படும் நல்வினை தீவினைகள் ஆகாமியம் என்றும் பக்குவப்பட்ட புண்ணிய பாவங்கள் சஞ்சிதம் என்றும், அனுபவத்துக்கு வரும் இன்பதுன்பங்கள் பிராரத்தம் எனவும் கன்மக் கோட்பாட்டில் சொல்லப்படும்.

எனவே நாம் செய்யும் நல்வினை புண்ணியமாகிய இன்பத்தைத் தரும் தீவினை பாவமாகித் துன்பத்தைத் தரும்.

61. **வினைப்பயன்கள் தாமாகவே செய்த உயிரை சென்று சேருமா?**

இல்லை. வினைகள் அறிவற்றவை ஆதலால் அவை தாமாக இயங்க மாட்டா. இறைவன்தான் அவரவர் செய்த வினைப்பயனை அவரவர்க்கே சேர்ப்பிப்பார்.

இதற்குச் சான்று – திருவருட்பயன்

**"செய்வானும், செய்வினையும், சேர்பயனும்**
**சேர்ப்பவனும், உய்வான் உளன் என்றுணர்**

செய்வான் – உயிர்

செய்வினை – அது செய்யும் நல்வினை தீவினை

சேர்பயன் – இன்பதுன்பம்

சேர்ப்பவன் – இறைவன்

உய்வான் – அவ்வினைப் பயனை அனுபவித்து
உய்திபெறும் ஆன்மா

இதுவே உண்மையாகும்.

62. விபத்தினால் அல்லது தற்கொலையினால் இறப்பவர்க்கு மரணக் கிரியைகள் உண்டா?

இவ்வித இறப்புகள் அவமிருத்து எனப்படும். தற்கொலை செய்பவருக்கு மரணக் கிரியை இல்லை. ஆறுமாதத்தின் மேல் மற்றைய கிரியைகள் செய்வர்.

விபத்தில் இறந்தவர் உடல் சிதையாமல் இருந்தால் மரணக்கிரியை செய்யலாம். சிதைந்திருந்தால் ஆறுமாதத்திற்குப் பின்தான் மற்றைய கிரியைகள் எனப் பத்ததிகளில் சொல்லப்பட்டிருப்பதாகப் பெரியோர்கள் சொல்லுவர்.